# ஏலி

# சாத்தானின் பிள்ளைகளைக் கொண்டிருந்த தேவமனிதர்

## (2:12–4:22)

*இஸ்ரவேலில் இருந்த துக்கத்திற்குரிய கேடுபாடொன்று 2:12–4:22ல் வெளிப்படுத்தப்படுகின்றது. நாடானது நடத்துவத்துவம் இல்லாதிருந்தது; சகல துறைகளிலும் வழிகாட்டுதல் குறைவுபட்டிருந்தது; மற்றும் ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே ஒரு பிரமாணமாக இருந்து வந்தான். ஆசாரியர்கள் நடத்துவத்துவத்தை அளித்திருக்க வேண்டும், ஆனால் அவர்களும் கூட நெறி தவறிப் போயிருந்தனர் என்று இவ்வசனப் பகுதியில் நாம் காண்கின்றோம். அன்னாள் தனது இளம் மகன் சாமுவேலை ஒப்புக் கொடுத்தல் என்ற மென்மையான வரலாற்றுப் பகுதியின் மத்தியில், இருள் நிறைந்த குறிப்பொன்று தோற்றம் தருகின்றது: "ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை" (2:12). இதன் விளைவாக, எல்லாம் கெட்டுப் போயிற்று. பிரச்சனையின் வேரானது ஏலி மற்றும் அவர் தம் இரண்டு மகன்கள் மீது கவனம் கொண்டிருந்தது.*

*ஏலி சீலோவில் பிரதான ஆசாரியராக இருந்தார். அவர் ஆரோனின் மகன்களில் இளையவரான இத்தாமரின் வம்சத்தில் வந்தவராயிருந்தார். அவர் தமது ஐம்பத்தி எட்டாவது வயதில் இஸ்ரவேலின் மீது நியாயாதிபதியானார், நாற்பது ஆண்டுகள் அளவாக நியாயந்தீர்த்து வந்தார் (4:18). இவரைப் பற்றி வேதாகமத்தில் முதன் முதல் குறிப்பிடப்பட்ட வேளையில் இவருக்கு ஏறக்குறைய எழுபது வயதாகியிருக்க வேண்டும். இவர் தனது முதிர் வயதில் தனக்குப் பிறந்த இரண்டு மகன்களைக் கொண்டிருந்தார், அவர்கள் அப்படிப் பிறக்கும் பிள்ளைகளுக்கு அடிக்கடி செய்யப்படுவது போலவே அதிகம் சலுகையுடன் நடத்தப்பட்டார்கள். இவர் அன்னாளைக் கடிந்து கொள்வதில் துரிதமாகவும் கண்டிப்பாகவும் இருந்தார், ஆனால் தனது பிள்ளைகளைக் கடிந்து கொள்வதில் மிகவும் மெதுவானவராகவும் மென்மையானவராகவும் இருந்தார்.*

*எல்லா நிகழ்ச்சிகளிலும் ஏலி தேவனுக்குக் கீழ்ப்படிதலுள்ள பக்தியான மனிதர் என்றே மதிக்கப்பட்டிருந்துள்ளார். அவர் உடன்படிக்கைப்*

பெட்டியை உயர்வாக மதித்தார். அவர் தம் மகன்களைப் புறக்கணித்து கவனியாமல் விட்டுவிட்டது ஒன்றுதான் அவருடைய தவறாயிருந்தது.

இப்பொழுது நாம் பார்த்துக் கொண்டுள்ள விவரமானது தேவபக்தியுள்ள பெற்றோருக்கு, பிசாசுத்தனமான பிள்ளைகளினால் உண்டான மாபெரும் வேதனையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தேவபக்தியுள்ள பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளையொன்றின் பக்தியின் மையினால் தலை கவிழ்ந்து கல்லறை செல்லும் அளவுக்குக் கூடத் துக்கம் அனுபவிக்கின்றனர். இது ஏலியைப் பொறுத்தமட்டில் உண்மையாயிற்று என்பது நிச்சயம்.

## எல்லைகள் தேவைப்படுகின்றன

அது ஏலியின் பெற்றோர்த்துவத்தில் ஒரு குறைபாடாயிருந்தது! ஏலி ஐயத்திற்கிடமின்றி அனுமதிக்கின்ற பெற்றோராயிருந்தார். அவரது மகன்கள் பற்றிய செய்தி அவரை வந்து சேர்ந்த பொழுது, அந்தச் செய்தியைப் பற்றி அவர் கவலையற்றிருந்தார். அவர் தம் பிள்ளைகளைக் கடிந்து கொண்ட போதிலும் பலமான வார்த்தைகளால் அதைச் செய்யவில்லை. நியாயாதிபதி மற்றும் ஆசாரியர் என்ற வகையில் அவரது கடமை தெளிவாயிருந்தது. அவர்கள் உடனடியாகத் தங்களின் பணியிலிருந்து நீக்கப்பட்டு, மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் (லேவி. 18:6, 20, 29; 20:10; 21:6, 7, 17, 23). ஏலி, தனது மகன்களின் பாவங்கள் கடந்த கால மூடுதல்கள் என்பதை அறிந்திருந்தார் (2:22), எனினும் அவர் வெறும் கண்டனத்துடன் திருப்திப்பட்டுக் கொண்டார். அவர் நியாயஞ் செலுத்துகின்ற தனது அதிகாரங்களில் இருந்து விலகி நின்றார். மனிதர்களிடத்தில் அவர்கள் நியாயமற்று நடந்து கொண்டது பற்றி அவர் அமைதி காத்தார், தேவனிடத்தில் மிகவும் சாந்தமுள்ளவராயிருந்தார் என்று அவர் நடக்கை பற்றி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சில பிள்ளைகள் அதிகமான கண்டிப்பினால் சீரழிக்கப்படுகின்றனர் (கொலோ. 3:21), ஆனால் அதை விட அதிகமான பிள்ளைகள் சிறிதளவேயான கண்டிப்பினால் சீரழிக்கப்படுகின்றனர். இரு விஷயங்களில் அனுமதியளித்தலுக்கு எதிராகப் பெற்றோர் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒன்று, ஒழுக்கத்தில் அனுமதியளித்தல் (3:13; 2:25). “கடிந்து கொள்ளுதல்” என்ற வார்த்தை பலவீனப்பட்ட, தாழ்ந்து போன, மற்றும் சக்தியின்மைக்குக் குறைந்து போன நிலையொன்றைக் குறிக்கின்றது. ஏலி தமது மகன்களைப் பலமான நடவடிக்கைகளின் மூலம் ஒழுங்கு படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அவர் அதைச் செய்யவில்லை. இரண்டாவது, பெற்றோர்த்துவ வழிநடத்துதலில் ஒரு அனுமதித்தல் (2:12, 17) என்பதாக உள்ளது. பெற்றோரின் நடத்துதல் இன்றி விஷயங்களைப் பொறுத்தமட்டில் தங்களுக்குத் தாங்களே முடிவெடுக்கும்படி விட்டுவிடப் படுகின்ற பிள்ளைகள் பொறுப்பற்றவர்களாய் வளருவார்கள்.

சில விஷயங்களில், “நாங்கள் எதில் தவறு செய்தோம்?” என்ற பெற்றோரின் கேள்விக்குப் பதில் தர இயலாது. ஆனால் ஏலியின் சூழ்நிலையில் அதற்குப் பதில் தர இயலும். அனுமதியளித்தல் என்பது அவருடைய

*பிள்ளைகளையும் (4:11) அவரையும் (4:18) மற்றும் மற்றவர்களையும் (4:22) சீரழிவிற்கு வழிநடத்திற்று.*

*அனுமதியளிக்கின்ற பெற்றோர்த்துவமானது திகைப்பூட்டும் நேரெதிர்ச் செயல்களை விளைவிக்கும். ஏலியின் குடும்பத்தைக் கவனியுங்கள். ஆலய நடக்கையில் நம்ப இயலாத நேரெதிர்ச் செயலொன்று அங்கிருந்தது (1:14; 2:13, 14). பலியின் ஒரு பங்கு ஆசாரியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று தேவன் நியமித்திருந்தார் (உபா. 12:18). ஏலியின் மகன்கள் பேராசை கொண்டவர்களாக அதிகம் விரும்புகின்றவர்களாக இருந்தார்கள். ஆராதிப்பவர்களுக்கு உரிமையாக வேண்டிய மாம்சத்தை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள் (லேவி. 8:31; 2 நாளா. 35:13). மக்களிடத்தில் களவு செய்ததுடன் திருப்தியடையாத அவர்கள், தேவனிடத்திலும் களவு செய்யத் தொடங்கினார்கள். தேவனுடைய பலிபீடத்தில் கொழுப்பைத் தகனிக்க வேண்டியதாயிருந்தது (லேவி. 3:5-17; 7:31, 34), ஆனால் (ஏலியின்) மகன்கள் கொழுப்பைத் தகனிக்க மறுத்துவிட்டார்கள் (2:17). இவைகள் தேவதூஷணச் செயல்களாயிருந்தன, ஆனால் அவர்கள் இவற்றை நிறுத்திக் கொள்ளாதிருந்தார்கள். அவர்கள் தங்கள் இச்சையானது தங்களை விரட்டும்படிக்கு அனுமதித்து, கூடாரத்தின் வாயிலில் இருந்த பெண்களுடன் ஒழுக்கவீனமானவைகளை நடப்பித்தார்கள் (2:22). ஏலி மாறுபட்டவராயிருந்தார்! அவர் பக்தியுள்ள ஒப்புக்கொடுத்தலின் சித்தரிப்பாயிருந்தார்.*

*உடன்படிக்கைப் பெட்டியைக் குறித்த அவர்களின் கண்ணோட்டங்களில் நேரெதிர்த் தன்மையிருந்தது (4:3, 4; 4:13, 18அ). ஏலியின் மகன்கள் பேழையை மூட நம்பிக்கை நிறைந்த வகையில் மதித்தார்கள். மதம் என்பது அவர்களைப் பொறுத்தமட்டில் வெளிப்படையான சடங்காச்சாரமாக மட்டும் இருந்து வந்தது. உடன்படிக்கைப் பெட்டி என்பது விந்தையானதாகவும் மந்திர சக்தியுள்ளதாகவும் கருதப்பட்டது. ஏலியைப் பொறுத்தமட்டில் உடன்படிக்கைப் பெட்டியானது பரிசுத்தமானதாகவும் பயபக்திக்கு உரியதாகவும் இருந்து வந்தது. அது யுத்தகளத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதை அவர் மனவிருப்பம் இன்றியே அனுமதித்தார் என்பதற்கு ஆதாரம் உள்ளது. ஆனால் அவர் வெற்றிகரமான ஒரு மறுப்பை நிலைநிறுத்துவதற்கு அடிக்கடி இணங்கிச் செல்ல வேண்டியிருந்தது. உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றிய இந்தக் கண்ணோட்டங்கள் ஒவ்வொன்றும் யெகோவாவைப் பற்றிய அவருடைய கருத்தைப் பிரதிபலித்தன.*

*இவர்கள் ஒவ்வொருவரும் சக மனிதர்களை எவ்வாறு நடத்தினார்கள் என்பதில் நேரெதிர்த் தன்மை இருந்தது. மகன்கள் சுயநலத்தினால் ஆளப்பட்டிருந்தனர். மற்றவர்களைத் தங்களின் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளுகையில், ஆபாச நடக்கை, பேராசை மற்றும் தூய்மையில்லாமை ஆகியவை மகன்களின் குணங்களாயிருந்தன. ஏலியோ பிறரின் மீது பரிதாபம் கொள்பவராக (1:7), மற்றும் பிறருடைய வாழ்வில் நன்மையை விரும்புகின்றவராக (2:20) மட்டுமே குறிக்கப்பட்டார்.*

*இவர்கள் தேவனைப் புரிந்து கொண்ட வழிமுறையில் நேரெதித்*

*தன்மையிருந்தது. ஏலியின் மகன்கள் ஆவிக்குரியவர்களாக இருந்ததில்லை மற்றும் அவர்கள் நடைமுறையில் தேவநம்பிக்கையற்றவர்களாயிருந் தார்கள் (2:12). அவர்கள் தேவனுடன் தொடர்பு கொண்டிருந்ததில்லை, அவரைக் குறித்து உணர்ந்ததில்லை, மற்றும் அவருக்குக் கடமைப்பட்ட உணர்வறிவு எதுவும் அவர்களிடம் இல்லை (2:12) ஏலி வித்தியாசப் பட்டவராயிருந்தார்! (3:18; 4:13).*

*ஏலி தமது மகன்களில் அதிகாரத்துவத்திற்கு மதிப்பளித்தல் என்ற பண்பை நிலைநாட்டத் தவறியதினால் தெளிவான நேரெதிர்த் தன்மை களின் இந்த வரிசையானது நிலவியது. அனுமதித்து விடுகின்ற பெற்றோர்த் துவத்தில் அடிக்கடி இவ்விதமாக துன்பநிலை நிலவுகின்றது.*

*அனுமதித்தல் என்பதில் இருந்து மிகவும் மோசமான விளைவுகள் எழுகின்றன. முதலாவது, குடும்பத்தின் செல்வாக்கு அழிக்கப்பட்டது (2:22-24). பாவம் என்பது பாவியுடன் முடிந்து விடுவதில்லை. ஒவ்வொரு மனிதரும் மற்ற ஒவ்வொருவருடனும் உறவு படுத்தப்பட்டுள்ளனர்; எல்லாரும் எல்லாரையும் தொடுகின்றோம். ஏலியின் குடும்பத்தினுடைய உயர்மதிப்பானது என்றென்றைக்குமாக மறைந்து போய் விட்டது! குடும்பத்திற்குள்ளாக கலகங்கள் வலுப் பெற்றன (2:25). ஒருமுறை ஏலி தனது மகன்களின் அபாயமான ஓட்டத்தைக் கண்டு அவர்களின் நடவடிக்கைகளை மாற்ற முயற்சி செய்தார், ஆனால் அது அவரைப் பொறுத்தமட்டில் மிகவும் தாமதமான செயல்பாடாயிருந்தது, ஏனெனில் அவருடைய மகன்கள் பொல்லாங்கில் வேரூன்றியவர்களாயிருந்து மாற மறுத்து விட்டார்கள். ஒரு கலகம் காணப்பட்டது. தேவனுக்கான குடும்ப ஒப்புக்கொடுத்தலானது விட்டுக் கொடுக்கப்பட்டது (2:29). வசனம் 2:29ன் வார்த்தைகள் ஏலியிடம் பேசப்படுவது என்பது நம்புதற்கரியதாகக் காணப்படுகின்றது. தேவன் தம்முடைய பலிகளை ஏலி "உதைத்தார்" என்று குற்றஞ் சாட்டினார். "உதைத்தல்" என்ற வார்த்தையானது நுகத்தை ஏற்க மறுத்து வண்டிலின் திருப்பியை வன்முறையாக உதறித் தள்ளுவதைக் குறிக்கின்றது. அது, ஏலி தேவனுடைய கட்டளைகளுக்குக் கட்டுப் பட்டிருக்க விரும்பாதிருந்தார் என்ற குற்றச்சாட்டாக இருந்தது! ஏலி தேவனுடனான பிணைத்தல்களைக் காட்டிலும் தனது மகன்களுடனான பிணைத்தல்களை (விரும்பித்) தேர்ந்து கொண்டிருந்தார். ஏலி, யெகோவாவை விட தனது மகன்களை அதிகமாகக் கனப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டார். இந்த விளைவு சாதாரணமானதாக உள்ளது. பெற்றோர், ஒரு தவறுக்கு சுய பொறுப்பு எதையாகிலும் ஒப்புக் கொள்வதற் குப் பதிலாக தேவனை, சபையை அல்லது பிரசங்கியாரை குற்றப்படுத்து வதென்பது சுலபமாயிருக்கக் காண்கின்றார்கள்.*

*இரண்டாவது, குடும்பத்தின் வம்சா வழிகள் துக்கத்தை அனுபவித் தார்கள் (2:33; 4:13-17). ஏலியும் அவரது மகன்களும் தங்களைத் தகுதி யற்றவர்கள் என்று நிரூபித்து ஆசாரியத்துவத்தை இழந்தார்கள். அவர்களின் பெயர்கள் எந்த ஒரு வம்ச வரலாற்றிலும் இடம் பெறவில்லை! உடன்படிக்கைப் பெட்டியின் இழப்புடனும் சீலோவில் ஆசரிப்புக் கூடாரத்தின் வீழ்ச்சியுடனும் அவர்கள் என்றென்றைக்குமாக அடையாளப்*

*படுத்தப்பட்டார்கள். குடும்பத்தின் பாவத்தினிமித்தம் குடும்பத்தின் பெலத்தை முறித்துப் போடுவதாகக் கர்த்தர் வாக்குத்தத்தம் செய்தார் (2:31). இந்த வாக்குத்தத்தம் யுத்த களத்தில் (4:11); சீலோவின் வீழ்ச்சியில் (சங். 78:60 முதல்); மற்றும் கடைசியாக நோப் என்ற இடத்தில் (22:18) நிறைவேறியது.*

*ஒருவர் தேவபக்தியுள்ள மனிதராயிருந்தும் கூட "சாத்தானுடைய பிள்ளைகளை" வளர்க்கக் கூடியவராயிருந்தது எவ்வாறு என்பதற்கான விஷயங்களை நாம் ஏலியின் தெளிவான வரலாற்றிலிருந்து கண்டறிந் துள்ளோம். உடன்படிக்கைப் பெட்டி பிடிக்கப்பட்ட நாளில் ஏலியும் அவருடைய மகன்களும் இறந்து போனார்கள். துன்பகரமான அந்த நாளில் ஏலியின் வீட்டில் ஒரு பிள்ளை பிறந்தது, அந்தப் பிள்ளைக்கு "மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று" என்று அர்த்தங் கொள்ளும் பெயர் வைக்கப்பட்டது (4:21). இது ஏலியின் குடும்பத்தினுடைய முடிவுக்குப் பொருத்தமான பெயராக இருந்தது. மகிமையானது அதிக சலுகை காண்பிக்கப்பட்டு வீணாக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஒப்புவிக்கப் பட்டிருந்தது!*

## *கற்றுக் கொண்ட பாடங்கள்*

*முதலாவது, ஏலியின் தோல்வியானது, பெற்றோர் தங்கள் பிள்ளை களை வளர்க்கையில் செய்யக் கூடாதவை எவை என்று வெளிப்படுத்து கின்றது; தேவனுடைய கட்டளைகளை இலகுவாக நினைத்து விடாதீர்கள் (2:27-29அ). உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் உள்ள தவறுகளை மன்னித்து அல்லது நியாயப்படுத்தி (2:29ஆ) அதன் மூலம் அவர்களைத் தேவனுக்கு மேலாகக் கனப்படுத்தி விடாதீர்கள். ஒரு பிள்ளையின் பாவத்திற்குப் பங்காளியாகி விடாதீர்கள் (2:29இ). உங்கள் பிள்ளைகளிடத்தில் நீங்கள் செய்கின்ற செயல்கள் பிறர் மீது மிகப் பெரிய வகையில் செயல்விளைவைக் கொண்டிருக்கும் என்பதால் பெற்றோருக்குரிய உங்கள் கடமைகளை இலகுவானதென்று ஏற்றுக் கொள்ள நினைக்காதீர்கள் (2:30-36).*

*இரண்டாவது, ஏலியின் பயங்கரமான தோல்வியானது எல்க்கானா மற்றும் அன்னாளின் பெற்றோர்த்துவக் கொள்கைகளைப் பயன்படுத்து வதின் அவசியத்தை வலியுறுத்துகின்றது: பிள்ளையானவன் கர்த்தரிட மிருந்து வந்துள்ள ஒரு கொடை என்பதையும் அவன் மாபெரும் கடமை யொன்றை உங்களுக்குக் கொண்டு வருகின்றான் என்பதையும் உணர்ந் தறியுங்கள். இளமையான மென்மையான இருதயங்களில் ஆவிக்குரிய மதிப்புகளை நடவேண்டிய அவசியத் தேவைகளை உணர்ந்தறியுங்கள். உங்கள் பிள்ளையை மேம்படுத்தும் இலக்கில் முயற்சிப்பதின் அவசியத்தை தேவனுக்காக விந்தை நிறைந்த செல்வாக்கு என்று உணர்ந்தறியுங்கள். உங்கள் பிள்ளை "வாழ்கின்ற நாட்களில் எல்லாம்" அவனுக்கு அறிவுறுத்த வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தறியுங்கள். பெற்றோர்கள் தாங்கள் அறிந்தவற்றை மட்டுமே போதிக்க இயலும், தாங்கள் கொண்டுள்ள எண்ணப்போக்குகளை மட்டுமே செயல்விளக்கப்படுத்த இயலும், மற்றும்*

தேவன் மீது தாங்கள் சுயமாக எந்த அளவிற்கு பயபக்தி செலுத்து கிறார்களோ அந்த அளவிற்கே பிள்ளைகளுக்குள் தேவனிடத்திலான மதிப்பை ஊன்றக் கட்ட இயலும் என்பவற்றை உணர்ந்தறியுங்கள்.

## முடிவுரை

பெற்றோர்த்துவம் என்பது "நொறுங்கக் கூடிய" பணியாக உள்ளது. பிள்ளைகள் தேவனுடைய வழிகளில் பயிற்றுவிக்கப்பட வேண்டு மென்றால், இதற்கு பூமிக்குரியதல்லாத ஞானம் தேவைப்படுகின்றது. பெற்றோர்கள் தவறு செய்வார்கள் என்பது நிச்சயமே, ஆனால் தேவனுக்குப் பயந்தவர்களாகவும் தங்களுடைய பிள்ளைகளுக்குள் தேவனுக்கான ஒப்புக் கொடுத்தலை ஊன்றக் கட்டுகிறவர்களாகவும் இருக்கின்ற பெற்றோர் மிக மிக சில தவறுகளை மட்டுமே செய்வார்கள்!

ஏலி, தனது பிள்ளைகளுடைய புலம்பல்களுடனும் கெஞ்சுதல் களுடனும் "சம்மதித்து போவது" என்பது சுலபமான வேலையல்ல என்பதை உணர்ந்தறியத் தவறி விட்டார். அவர் தமது பிள்ளைகளைத் தேவனுடைய அதிகாரத்துவம் என்ற நுகத்தின் கீழிருக்கும்படி முறித்துப் போடாதபடி யினால் உடைந்து போன இருதயத்துடன் இறந்து போனார்! (3:13).